Registered as a NewsPaper

# ஈழநாதம்

Eelanatham — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - iv

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 28 | 11-04-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 52

அழகன் ஓப்செற் பதிப்பகம்

வன்னி மண்ணில் உங்கள் சகல விதமான அச்சுப் பதிப்புக்களையும்

■ தரமான முறையில்
■ கணனி முறையில்
■ குறித்த தவணையில்

செய்து கொள்ள வேண்டிய ஒரே பதிப்பகம்.

யாழ். சாலை, கிளிநொச்சி.

✯ சிரானின் பணிகள் ✯ உலக நிதியைக் கையாளல் ✯ சிறுவர் தொடர்பான விடயங்கள்

# சர்வதேச நிதிநிறுவனங்களின் பிரதிநிதிகள்

# விடுதலைப்புலிகள் நேற்றைய சந்திப்பில் ஆராய்வு!



சந்திப்பில் கலந்து கொண்ட சர்வதேச நிதிநிறுவன பிரதிநிதிகள்

## சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்தது

(அலுவலக செய்தியாளர்)

**'சிரான்' அமைப்பின் பணிகள், உலக நிதியைக் கையாளுதல், சிறுவர் தொடர்பான விடயங்கள் குறித்து சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நேற்று அரசியல்துறை நடுவப்பணியகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் ஆராயப்பட்டது.**

கிளிநொச்சியில் உள்ள அரசியல்துறை நடுவப்பணியகத்தில் பகல் 11.15 மணியளவில் ஆரம்பமான இப் பேச்சுவார்த்தை ஒன்றரை மணித்தியாலங்கள் இடம்பெற்றது. விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களும், விடுதலைப்புலிகளின் சர்வதேச பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் அவர்களும் சமாதான செயலகத்தைச் சார்ந்த பவானந்தனும் கலந்துகொண்டனர்.

(ivஆம் பக்கம் பார்க்க)

## சர்வசன வாக்கெடுப்பை நடாத்தும் அதிகாரம் சனாதிபதிக்கே உண்டு

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ச

சமாதான முயற்சிகள் தொடர்பான சர்வசன வாக்கெடுப்பை நடாத்தும் அதிகாரம் சனாதிபதிக்கே உண்டு என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வசன வாக்கெடுப்பை நடத்தப்போவதாக பிரதமரும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் கூறுவதாக தெரிவித்துள்ள அவர் சர்வசன வாக்கெடுப்பை நடாத்துவது அவர்களது அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட நடவடிக்கை என்றும் தெரிவித்துள்ளார். அத்துடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சியில் எதிர்க்கட்சிகளின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## அரைக்கும் ஆலை விபத்தில் பெண் ஒருவர் பலியானார்!

(அலுவலக செய்தியாளர்)

வட்டக்கச்சிப் பகுதியிலுள்ள அரைக்கும் ஆலையொன்றில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் பலியானார்.

அரைக்கும் ஆலையில் தொழிலில் ஈடுபட்டிருந்த இவர் அங்கு சுழன்று கொண்டிருந்த பட்டியில் சிக்குண்டு காயமடைந்தே மரணமானார்.

கல்மடுநகர் தங்கன் குடியிருப்பில் வசித்து வந்த ரஞ்சினி (வயது - 24) என்பவரே மரணமானவராவார். (அ)

– புத்தளத்தில் நடைபெறவிருந்த –

## புனர்வாழ்வு அமைச்சின் செயலமர்வில் குழப்பம்

(சிலாபம்)

புத்தளத்தில் நேற்று நடைபெறவிருந்த சிறிலங்காவின் புனர்வாழ்வு அதிகாரிகள் மீள்குடியமர்வு அமைச்சின் நடமாடும் சேவை அங்கு இடம்பெற்ற வன்முறையால் நடைபெறவில்லை.

அமைச்சின் ஒருங்கிணைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுத்தீன், வன்னி அபிவிருத்தி உதவி அமைச்சர் நூர்தீன் மசூர் ஆகியோரது ஆதரவாளர்கள் எனக் கருதப்படும் இரண்டு குழுவினருக்கு இடையே நடந்த தர்க்கம் கலகமாக வெடித்தது றிசாத் பதியுத்தீன் உதவி அமைச்சர் நூர்தீன் மசூரிற்கு நட

(ivஆம் பக்கம் பார்க்க)

## 10 'ஏ' பெற்றார்



கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரணப் பரீட்சையில் புதுக்குடியிருப்பு மாணவன் 10 பாடங்களில் 'ஏ' தரத்

(ivஆம் பக்கம் பார்க்க)

சந்திரிகாவுடனான சந்திப்பின் முன்

## இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ஜெயலலிதாவுடன் பேசினார்

(சென்னை)

தமிழக மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுடன் நேற்று கலந்தாலோசனை நடத்தியுள்ளார். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பிரதமர் சந்திக்க முன்னர் இந்த ஆலோசனை இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் இலங்கை மீனவர்களால் தாக்கப்படுவது மற்றும் சிறை வைக்கப்படுவது போன்ற பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகாண சிறிலங்கா சனாதிபதியை வலியுறுத்துமாறு பிரதமரை முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(ivஆம் பக்கம் பார்க்க)



சிறுவர் தொடர்பான பயிற்சிப்பட்டறையின் போது...

## தமிழ்ச் சிறார்கள் மீதான பாரபட்சம் தடுக்கப்பட்டிருப்பின் யுத்தம் நடந்திராது

### அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன்

(அலுவலக செய்தியாளர்)

தமிழ்ச் சிறார்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டபொழுதும் அவர்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட பொழுதும் அவற்றைத் தடுப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இங்கே ஒரு யுத்தம் நடந்திருக்காது என அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற சிறுவர்கள் தொடர்பான பயிற்சிப்பட்டறையின் போது ஆரம்ப உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது.

குழந்தைகளின் நலனை மையமாகக் கொண்டு நடத்தப்படவிருக்கும் இப்பட்டறையை ஆரம்பித்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்பட்டறையை ஒழுங்குசெய்து ஓர் உன்னதமான அர்ப்பணிப்பிற்கு உங்களை ஈடுபடுத்தியமைக்கு மனப்

(ivஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

**தவறிவிட்டது**

செபமாலை முத்து ஜெயப்பிரகாஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (853361 194V), நிரந்தர பயண அட்டையும் முல்லைத்தீவு – இரணைப்பாலை வீதியில் தொலைந்துள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் இல்லாவிடில் அமலன்ஸ் வெதுப்பகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். உரிய சன்மானம் வழங்கப்படும். (2832)


## ஓராண்டு நிறைவு விழா

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்தின் ஓராண்டு நிறைவு விழா இன்று பி.ப.2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. கிளிநொச்சி டிப்போச் சந்திக்கருகாமையில் அமைந்துள்ள மேற்படி நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ள ஓராண்டு நிறைவு விழா நிகழ்வில் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளும் வண்ணம் நிர்வாகத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

- வடக்கில் படையினரால் கைதுசெய்யப்பட்டு -

# காணாமல் போனோர் குறித்து வழக்குத்தாக்கல் செய்யமுடிவு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் சம்பந்தமான வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு வசதியாக தொழும்பிலுள்ள காணாமல்போனோர் குடும்ப அங்கத்தவர்களுக்கான அமைப்பின் சட்டவல்லுனர் குழு கடந்த 08ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தமது விசாரணைகளை நடத்தியது.

கொழும்பிலிருந்து வருகை தந்த மனித உரிமைகளுக்கான சட்ட வல்லுனர் சந்திரபாலகுமாரதுங்க தலைமையில் 03 சட்ட வல்லுனர்கள் கடந்த 08ஆம் திகதி யாழ்.வீரசிங்க மண்டபத்தில் தமது விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

இந்த விசாரணையில் காணாமல் போனவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். இந்த விசாரணை நேற்றுமுன்தினமும் தொடர்ந்து நடைபெற்றது.

விசாரணைகளின் இறுதி முடிவின்படி சாட்சியங்கள் உள்ள முறைப்பாடுகள் கிரிமினல் குற்றச்சாட்டுக்களாகவும் மற்றைய முறைப்பாடுகள் மேன் முறையீட்டு வழக்குகளாகவும் இம்மாத இறுதிக்குள் யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளன.

இந்த வழக்குகளில் ஆஜராகுவதற்கு கொழும்பிலுள்ள பிரபல சட்டத் தரணிகள் முன்வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


**MSF- HOLLAND**

**வேலை வாய்ப்பு**

புதுக்குடியிருப்பைத் தளமாகக்கொண்டு இயங்கும் MSF- HOLLAND நிறுவனமானது பின்வரும் வெற்றிடங்களுக்கு உங்கள் விண்ணப்பங்களை நாடுகின்றது.

**1. SECURITY GUARD (Relief)- 01**

தகைமைகள்:-

- சிறிதளவு ஆங்கில அறிவு.
- 50 வயதிற்கு உட்பட்டவராக இருக்கவேண்டும்.
- சிறந்த உடலாரோக்கியம் உள்ளவராக இருக்கவேண்டும்.

**2. CLEANER (Relief)-01 & COOK (Relief) - 01**

தகைமைகள்:-

- சிறிதளவு ஆங்கில அறிவு.
- 50 வயதிற்கு உட்பட்டவராக இருக்கவேண்டும்.
- சிறந்த உடலாரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும்.
- நன்றாக உணவு சமைக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு 19.04.2003 மாலை 5.00 மணிக்கு முன்னதாக,**

**The Administrator,
MSF-Holland,
Puthukkudiyiruppu.**

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
புதுக்குடியிருப்பு எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பப்படுவர்.

(2828) **நிர்வாகி.**


# அரசிற்கெதிராக 69 இராணுவத்தினர் உண்ணாவிரதப் போராட்டம்

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணிக் காலத்தில் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட 69 இராணுவத்தினர் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 04ஆம் திகதி முதல் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக இவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தின் ஆயுத மனித வலுப்பிரிவில் 10 வருடங்களுக்கு முன்னர் சேர்த்துக் கொள்ளப்பட்ட இந்த 69 இராணுவத்தினரும் பயிற்சியின் பின்னர் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களைப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒருவருக்கு ஒருலட்சத்து 25 ஆயிரம் ரூபா நஷ்டஈடு கொடுத்து நீக்கியிருந்தது.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் வழங்க வேண்டும் எனவும், தமக்கு வழங்கப்பட்ட நஷ்ட ஈட்டு நிதி போதாது என்று கோரியுமே 69 படையினரும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## அடையாள வேலை நிறுத்தம்

(கொழும்பு)

இரு பிரதான கோரிக்கைகளை முன்வைத்து மின்சார சபையைச் சேர்ந்த 27 தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன.

இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் சுமார் ஆயிரத்திற்கும் அதிகமானோர் ஈடுபட்டதாக தொழிற்சங்கப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளினால் பொதுமக்களுக்கோ, சபைக்கோ எவ்வித பயனும் இல்லை. இதனால் அரசாங்கம் மேற்கொள்ளும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

அத்துடன் 97 ஆம் ஆண்டில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் முரண்பாடுகளை நீக்கி 40 சதவீத சம்பள அதிகரிப்பை வழங்க அரசு முன்வர வேண்டும் என தொழிற்சங்கப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

## சமாதான முயற்சிகள் குறித்து பிக்குகளுக்கு உடன் விளக்குக

### பிரதமர் ரணில் உத்தரவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக அவ்வப்போது மகாசங்கத்தினருக்கு விளக்கமளிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

இத்தகவலைக் கடந்த 8 ஆம் திகதி அனுராதபுரத்தில் பிக்குகளின் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வெளியிட்டார்.

சமாதான முயற்சிகளில் அனைத்துத் தரப்பினரின் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியமாகும். குறிப்பாக பௌத்த பிக்குகள் இந்த முயற்சிக்குப் பூரண ஆதரவு வழங்க வேண்டும்.

இதற்காகவே சமாதான முயற்சிகள் குறித்து மகாசங்கத்தினருக்கு அவ்வப்போது விளக்கமளிக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருப்பதாகவும் அமைச்சர் ஜீ.எஸ்.பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.




**வாகன விற்பனை**

**ISUZU ELF TRUCK - 350**

போரூட் வன்னித்திட்டத்திற்கு சொந்தமான 68-2702 பதிவு இலக்கத்தைக் கொண்ட மேற்படி வாகனம் விற்பனைக்கு உண்டு. இவ்வாகனம் தற்போது எமது பாவனையிலுள்ளது. இதன் தற்போதைய பெறுமதி ரூ. 700,000/= என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வாகனத்தைக் கீழ்க்காணும் முகவரியில் குறிப்பிடப்பட்ட திகதிகளில் பார்வையிட முடியும்.

தீர்மானிக்கப்பட்ட விலையில் இவ்வாகனத்தை பெற்றுக்கொள்பவர் உடனடியாகப் பெறுமதியின் 25%தை உடனடியாகச் செலுத்தவதுடன் மிகுதிப்பணத்தை 07 நாட்களுக்குள் வழங்கவேண்டும்.

வாகனத்தைப் பார்வையிடும் திகதிகள்:
21-04-2003.22-04-2003. 23-04-2003

**போரூட் வன்னித்திட்டம்**

**CTB றோட்,
செல்வாநகர், கிளிநொச்சி.**

இவ்வாகனத்தை கொள்வனவு செய்யவிரும்புபவர்கள் அவர்களின் விலை களை எழுத்து மூலமாக, எமது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் 25-04-2003 பிற்பகல் 1.00 மணி வரை இடப்படல் வேண்டும். அன்றைய தினமே பிற்பகல் 2.00 மணிக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு விற்பனை தீர்மானிக்கப்படும்.

திட்ட முகாமையாளர்,
போரூட் வன்னித்திட்டம்.

(சி-7830)


## கண்டெடுப்பு

இராசையா திருப்பதி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும்,நிரந்தர பயண அட்டையும் (பேர்சும்) வட்டக்கச்சிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும். (12)

## பிற்போடப்பட்டுள்ளது

த.பொ.மே. நிறுவனத்தின் முல்லை மாவட்டச் செயலகமும் கால் நடை வளர்ப்போர் கூ. சங்கமும் இணைந்து புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நடாத்த இருந்த மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியானது தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக பொ. செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. (26)


**3ஆம் ஆண்டு நினைவில்...**



**லெப். கேணல் அரசன்/மதன்**
**[துரைசிங்கம் சுந்தரலிங்கம்]**
வவுனியா
(சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் முன்னாள் தளபதி)

**பிறப்பு:** 07♦06♦1972 **வீரச்சாவு:** 11♦04♦2000

சம்பவம்: ஓயாத அலைகள் - 03 தரையிறக்க வரலாற்றுச் சமரின் போது இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

தகவல்:
(2831) சகோதரன் **து. நளன்** (போராளி)

# போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் இணைந்து பணியாற்ற சுவிஸ் விருப்பம்

## – சுவிஸ் வெளிவிவகார அமைச்சு தகவல்

(ஜெனிவா)

**இலங்கை போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவில் இணைந்து பணியாற்ற சுவிற்சர்லாந்து அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. சுவிற்சர்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மார்க்கஸ் பெய்னிகர் பேர்ளினில் செய்தியாளர்களிடையே பேசியபோதே இவ் விருப்பத்தை வெளியிட்டார்.**

போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழுவின் அதிகாரம் அதகரிக்கப் பட்டு, கண்காணிப்புக் குழு வலுப்படுத்தப்பட வேண்டும்.

நோர்வே, புலிகள், இலங்கை அரசாங்கம் ஆகிய மூன்று தரப்புக்களும் விரும்பினால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இணைந்து பணியாற்றத்தாம் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் விருப்பம் தெரிவித்தால் சுவிற்சர்லாந்தில் சமாதானப் பேச்சுக்கள் நடத்த ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஸ்ராலின் உள்ளிட்ட 4 எம்.எல்.ஏக்கள் தமிழக பொலிசாரால் கைது

(சென்னை)

சென்னை ராணிமேரி கல்லூரிக்குள் நுழைந்து வன்முறையைத் தூண்ட முயற்சித்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் மகனும் சென்னை மாநகர சபையின் முன்னாள் மேயருமான ஸ்ராலின் உட்பட நான்கு தி.மு. கழக எம்.எல்.ஏ.க்கள் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராணிமேரி கல்லூரிக்குள் தடையை மீறி உள்ளே சென்ற ஸ்டாலின், பொன்முடி உள்ளிட்ட தி.மு.க., எம்.எல்.ஏக்கள் மாணவிகளைப் போராட்டத்திற்குத் தூண்டி விட்டனர்.

கல்லூரியின் பாதுகாவலரை தாக்கி வன்முறையை தூண்டும் விதத்திலும் இவர்கள் செயற்பட்டனர்.

இதனால் கல்லூரியின் காவலர், பொலிசாருக்கு புகார் செய்தமையினாலும், கல்லூரிக்குள் நுழையும் வெளி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அக்கல்லூரி முதல்வர் மனுக் கொடுத்துள்ளமையினாலும், வழக்குப் பதிவு செய்த காவல் துறையினர் நேற்று முன்தினம் இரவு ஸ்டாலின், பொன்முடி, அன்பழகன், குசைன் ஆகியோரை தாம் கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

[illegible]வில் ஸ்டாலினை கைது [illegible]காக வேளச்சேரியிலுள்ள அவரது இல்லத்திற்கு பொலிசார் சென்ற போது, அங்கு தயாராக இருந்த கும்பல் காவல் துறையினை உள்ளே விடாது கதவை மூடிக் கொண்டனர்.

இருப்பினும் காவல் துறையினர் இரண்டு மணிநேரம் காத்திருந்து ஸ்டாலினைக் கைது செய்துள்ளனர்.

அப்போது காவல்துறையினரும் ஒத்துழைக்க மறுத்த திரு. ஸ்ராலின் பெரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

பின்னர் ஸ்ராலின் உள்ளிட்ட, கைது செய்யப்பட்ட நான்கு பேரும் சைதாப்பேட்டை 13ஆவது பெருநகர மாஜிஸ்ரேட் வெங்கட வரதன் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் 04 பேரையும் 15நாள் காவலில் வைக்கும்படி மாஜிஸ்ரேட் உத்தரவிட்டதை தொடர்ந்து கடலூர் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அப்போது தி.மு.க.வினர் நடத்திய கல்வீச்சில் அடையார் தலைமைக் காவல் நிலையக் காவலர் காயமடைந்துள்ளார்.

பின்னர் ஸ்டாலினை சிறைக்குக் கொண்டு சென்ற போது நடுவழியில் காவல்துறை வாகனங்கள் மீது தி.மு.க.வினர் கல் வீச்சுத் தாக்குதலிலும் ஈடுபட்டுள்ளனர்.

மு.க. ஸ்டாலின் உட்பட தி.மு.க சட்ட மன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டிருப்பதை அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை பற்றித் தீர்மானிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டுவதென தி.மு.க. நேற்று முடிவு எடுத்துள்ளது.

நேற்று சென்னையில் பேசிய கட்சித் தலைவர் கருணாநிதி, எதிர்க் கட்சிகளுடன் கலந்தாலோசிக்கப் படும் என்றும் ஸ்ராலின் கைது செய்யப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கூட்டங்களுக்கு ஒழுங்கு செய்துள்ளமைக்காக தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் பிச்சையாண்டி பன்னீர்ச்செல்வம் உட்பட ஆயிரக்கணக்கான கட்சித் தொண்டர்கள் மாநிலம் முழுவதும் பல இடங்களில் கைதுசெய்யப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

சமூகத்தின் ஒவ்வொரு துறையினரையும் விரோதித்துள்ள அ.தி.மு.க. அரசு பதவி இறங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ராலின் உட்பட தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டிருப்பது தமிழக அரசின் பழிவாங்கும் போக்கைக் காட்டுவதாக பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்களை அச்சுறுத்தாது, அவர்களின் பிரதிநிதிகளை முதலமைச்சரே அழைத்துப் பேச வேண்டும் என்றும் ராமதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சதாமின் முடிவு தெரியும் வரை ஈராக்கில் போர் தொடரும்

## - அமெ. பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக் சனாதிபதி சதாம்ஹுசைனின் முடிவு தெரியும்வரை அமெரிக்கப்படையினர் தொடர்ந்து யுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் கூறியுள்ளார்.

சதாம்ஹுசைன் அவரது மகன் மார் மற்றும் ஈராக் தலைமைத்துவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் சிறை பிடிக்கப்பட வேண்டும் அல்லது அவர்களது முடிவு தெரியும்வரை யுத்தம் இடம்பெறும்.

நடப்பு நிகழ்வுகள் பிரமிப்பூட்டும் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. சதாம் ஹுசைன் உயிருடன் இருக்கிறாரா, இறந்துவிட்டாரா என்பது எனக்குத் தெரியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

# பிரித்தானிய தூதரகம் மீது கொழும்பில் கல்வீச்சு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள பிரித்தானிய தூதரகத்தின் மீது நபர் ஒருவர் கற்களை வீசியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் நபர் ஒருவர் தூதராலயத்தை நோக்கிக் கற்களை வீசியுள்ளார். இந்தக் கல்வீச்சால் தூதரகத்தின் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.

இதனையடுத்து பிரித்தானிய தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரி ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து எச்சரிக்கை செய்துள்ளார்.

இதேவேளை, தூதரகத்திற்கு முன்னால் உள்ள கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் உடனடியாகக் கற்களை வீசிய நபரைக் கைதுசெய்தனர்.

மேற்படி கல்வீச்சை மேற்கொண்டவர் ஒரு மன நோயாளியாக இருக்கலாம் என்று தெரிவித்த கொள்ளுப்பிட்டிப் பொலிஸார், குறித்த நபர் இரண்டு மாதங்களுக்கு முன்னர் அமெரிக்கத் தூதராலயத்தின் மீது கல்வீச்சு நடத்தியிருந்தார் என்றும் அப்போது அவரைக் கைதுசெய்ய முடியாமல் போய்விட்டதாகவும் குறிப்பிட்டனர்.

ஈராக் மீதான அமெரிக்க-பிரிட்டிஷ் படையினரின் தாக்குதலை அடுத்து கொழும்பிலுள்ள பிரித்தானிய அமெரிக்க தூதராலயங்களுக்கு விசேட கொமாண்டோ பாதுகாப்புப் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## -வடமராட்சி கிழக்கில்-

# சிறிலங்கா விமானப்படை இருதினங்களாக நோட்டம்!

வடமராட்சி கிழக்கு வான்பரப்பில் நேற்றும், நேற்று முன்தினமும் சிறிலங்காவின் வேவு விமானம் மாமுனை, செம்பியன்பற்று, மருதங்கேணி,தாளையடி ஆகிய பகுதிகளைப் பலமுறை வட்டமிட்டுச் சென்றுள்ளது.

இதனால் இங்குள்ள மக்கள் அச்சமும்,பீதியும் அடைந்துள்ள நிலையில் உள்ளனர்.

# சதாம் ஹுசைன் குறித்து முரண்பட்ட தகவல்கள்!

(லண்டன்)

பாக்தாத்தில் உள்ள சதாம் ஹுசைனின் வாசஸ்தலம் மீது அமெரிக்கா நடத்திய குண்டுத் தாக்குதலில் இருந்து சனாதிபதி சதாம் ஹுசைன் உயிர்தப்பியிருப்ப[illegible]க பிரிட்டன் புலனாய்வு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்தப்பட்டு ஒரு சில நிமிடங்களிலேயே சதாம் ஹுசைன் தப்பிச் சென்றுள்ளதாக புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே சதாம் ஹுசைன் கொல்லப்பட்டிருக்கலாம் என பெயர் குறிப்பிட விரும்பாத அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட கட்டடம் மீது அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்தியபோது அதில் சதாமின் இரு புதல்வர்களுடன் ஈராக்கிய புலனாய்வு அதிகாரிகள் உட்பட முப்பது பேர் அங்கு கூட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# குவாங்கோ படுகொலைக்கு பாப்பரசர் ஆழ்ந்த வருத்தம்

(றோம்)

ஆபிரிக்க நாடான குவாங்கோவில் சில தினங்களுக்கு முன் ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துள்ளார்.

குவாங்கோவில் பல ஆண்டு காலமாக உள்நாட்டுக் கலவரம் நடந்து வருகின்றது. இதில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில் கலவரத்தின் உச்சகட்டமாக சில தினங்களுக்கு முன்பு ஆயிரக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டுள்ளனர். உலகையே உலுக்கியெடுத்த இச்சம்பவத்திற்கு பரிசுத்த பாப்பரசர் ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துள்ளார்.

மனித குலப் படுகொலைகளை தடுத்து நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அனைத்து நாடுகளும் மேற்கொள்ள வேண்டும் என்றும், உலக மக்களிடையே அமைதியும் சமாதானமும் நிலவவேண்டும் என்றும் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறியுள்ளார்.

# ஈராக்கையடுத்து காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்கா கவனம் செலுத்தும்

## - அமெரிக்க அறிக்கைக்கு இந்திய லோக்சபாவில் கவலை

(புதுடில்லி)

ஈராக் போர் முடிவுற்றதும் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக இந்தியா - பாகிஸ்தான் மீது தனது கவனத்தைத்திருப்பப் போவதாக அமெரிக்க அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த அறிக்கை குறித்து இந்திய லோக்சபா உறுப்பினர்கள் நேற்றுக் கவலை தெரிவித்துள்ளனர்.

காஷ்மீர் விவகாரம் பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்குமிடையே மட்டும் தான் விவாதிக்கப்படும் என்று சபை உறுப்பினர்களுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங்கா நேற்று வாக்குறுதியளித்தார்.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை பாகிஸ்தானை மையமாகக் கொண்டதல்ல.

காஷ்மீர் விவகாரத்தில் மூன்றாவது நாட்டின் தலையீட்டை அனுமதிக்கும் பேச்சிற்கே இடமில்லை என்று இந்திய அரசு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அரசு விவாதிக்க வேண்டிய ஒரே விடயம் எல்லை தாண்டிய பயங்கரவாதம் மட்டும்தான் என்றும் இந்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாக்தாத் நகரின் சில பகுதிகளில் இன்னமும் ஈராக்கியப் படைகள்!

## இடையிடையே இருதரப்பும் மோதல்

(பாக்தாத்)

• ஈராக் தலைநகர் பாக்தாத்தின் பெரும் பகுதிகளை அமெரிக்கப் படைகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளபோதும். நகரின் சில பகுதிகளில் ஈராக் படைகள் நிலைகொண்டிருப்பதாகவும் பாக்தாத்தின் முழுப்பகுதியும் அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில் வரவில்லை என்றும் ஆங்காங்கே சில பகுதிகளில் மோதல் நடந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நேற்று ரைகிறிஸ் நதிகளுக்கருகே சதாம் ஹுசைனின் மாளிகை அமைந்திருந்த பகுதிக்கு அண்மையாக கடும்மோதல் நடந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஈராக்கின் வடக்குப் பகுதியில் கிர்குக் என்கிற முகக்கிய நகரின் பெரும்பகுதி குர்திஷ் இனப்போராளிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப் பட்டுள்ளன.

அமெரிக்க விசேட படையினரின் ஆதரவுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதேவேளை பாக்தாத் நகரின் பெரும் பகுதிகள் அமெரிக்க, பிரிட்டன் படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றபோதிலும் அங்கே அவர்களுக்கு எதிர்ப்புக்களும் தொடர்ந்து வருகின்றன. தலைநகரின் மேற்கு, வடகிழக்கு பகுதிகளில் நேற்று இப்போர் இடம்பெற்றுள்ளது.

### இந்திய...

நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்று சந்திக்க முன் பிரதமர் வாஜ்பாய் செல்வி ஜெயலலிதாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு இலங்கைக்கும் தமிழகத்துக்கும் தொடர்புடைய விடயங்கள் பற்றிக் கருத்துக் கேட்டார்.

தமிழக மீனவர் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டும் என்றும் தமிழ் நாட்டி லுள்ள இலங்கை அகதிகளை விரைவாகத் திருப்பி அனுப்பவும் அவர்களுக்கு தாய்நாட்டில் மீள் குடியேற்றத்துக்கு ஏற்பாடு செய்யுமாறும் பிரதமரிடம் முதலமைச்சர் எடுத்துக் கூறினார்.

இதன் பின்னர், பிரதமரையும் இந்திய குடியரசுத் தலைவரையும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுக் சந்தித்து உரையாடினார்.

### 10 'ஏ' பெற்றார்...

தில் சித்தியடைந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மாணவன் இரத்தினராசா மாறியோ மசனெட்தீபன் 10 'ஏ' எடுத்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

### சர்வதேச...

சர்வதேச நிதி நிறுவனங்களின் தரப்பில் உலகவங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் கெறால்ட், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜோன்கூனி, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்ட அதிகாரி மிக்கேல் பேமியா ஆகியோர் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

முன்னதாக நேற்றுப் பகல் 10.45 மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய உலக வங்கியின் இலங்கைக்கான அதிகாரி பீற்றர் கெறால்ட் தலைமையிலான குழுவினரை விடுதலைப் புலிகளின் சர்வதேச பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் அவர்கள் வரவேற்று அரசியல் துறை நடுவப்பணிய கத்திற்கு அழைத்து வரப்பட்டனர். (சோ)

# ஸ்ராலினை விடுவிக்கக்கோரி தமிழ் நாட்டில் மறியல்

(சென்னை)

திமுக இளைஞர் அணித் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான மு.ஸ்ராலின் நேற்று முன்தின மிரவு கைதுசெய்யப்பட்டிருப்பதை அடுத்து அவரை விடுவிக்கக்கோரி மறியல் போராட்டங்கள் நேற்று நடத்தப்பட்டன. அத்தோடு தமிழக அரசியல் கட்சித் தலைவர்களும் பலத்த கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

தமிழக அரசால் இடிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த சென்னை ராணிமேரி கல்லூரியினுள் இவரும் மற்றும் சில சட்டப் பேரவை உறுப்பினர்களும் பிரவேசித்து கூட்டம் நடத்தியதைத் தொடர்ந்து தமிழக முதல்வரின் உத்தரவின் பேரில் இவர் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று ஸ்ராலினை விடுவிக்கக் கோரி சட்டமன்றத்தில் கோரிக்கை விடுத்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பின்னர் வீதியில் இறங்கி மறியலில் ஈடுபட்டனர்.

# இலவச கண்சிகிச்சை முகாம்

இலவச கண்சிகிச்சை முகாம் ஒன்று புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் நாளை காலை 9.00 மணி முதல் 2.00 மணி வரை நடைபெறவுள்ளது.

வெளிநாட்டில் இருந்து வருகைதர இருக்கும் கண்சிகிச்சை நிபுணர் டாக்டர் நடனசபாபதி அவர்களால் இச் சிகிச்சை முகாம் மேற்கொள்ளவுள்ளதுடன் மருத்துவ ஆய்வுகளும் சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட நோயாளர்களிற்கே சிகிச்சை அளிக்கப்படவுள்ளதால் முன்கூட்டியே பதிவு செய்யவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்று மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது.

## தொலைபேசி துண்டிப்பு

(கொழும்பு

இலங்கை முழுவதிலும்இருந்தும் திருகோணமலைக்கான தொலைபேசித் தொடர்பு நேற்று இரவு துண்டிக்கப்பட்டிருந்தது. இச் செய்தி எழுதப்படும்வரை தொடர்புகள் கிடைக்கப்பெறவில்லை.

### புனர் வாழ்வு...

மாடும் சேவையிலிருந்து அழைப்பாணை விடப்பட்டதை அடுத்தே இருபிரிவினரும் கொதிப்படைந்தனர்.

### தமிழ்ச் சிறார்...

பூர்வமான நன்றி கூற விரும்புகிறேன். இதனை ஒழுங்குசெய்த யுனிசெவ் அமைப்பிற்கு எனது நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவிக்கும் அதேவேளை. அவர்களின் இம்முயற்சி பலனளித்து எங்கள் குழந்தைகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும் என்று நம்புகின்றேன்.

வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் வாழும் மக்கள் ஓர் கொடிய யுத்தத்திற்கும் பொருளாதாரத் தடைக்கும் போக்குவரத்துத் தடைகளுக்கும் முகம்கொடுத்தவர்கள். யுத்தம் நடக்கும் எந்தப் பிரதேசத்திலுமேயுள்ள இயல்பான விளைவாக, அதுவும் இரண்டு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலமாகத் தொடர்ந்து யுத்தம் நடைபெற்றது என்ற வகையில், குழந்தைகளே பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள். அவர்கள் கல்வியும் வளரும் பருவத்தில் போசாக்கு நிலையும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டன.

வாழ்வின் எல்லா அம்சங்களிலும் பாரபட்சத்திற்கு முகம் கொடுத்த இக்குழந்தைகள், ஓர் எதிர் மறையாக,பாரபட்சமற்ற, கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்கும் வான் தாக்குதல்களுக்கும் தொடர்ச்சியான இடப்பெயர்வுகளுக்கும் ஆளாக நேரிட்டதுடன் பசி, பட்டினியை அம்மணமாகக் கண்டார்கள். சீருடையுடன் பாடசாலையில் இருக்கும்பொழுதும், விளையாட்டு மைதானங்களில் விளையாடிக் கொண்டிருந்தபொழுதும், கிராமங்கள் குண்டுவீச்சால் தாக்கப்படுமோ என அஞ்சி கோவில்களிலும் தேவாலயங்களிலும் தஞ்சம் புகுந்த வேளைகளில் கூட ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான சிறார்கள் பெற்றோரை இழந்தனர். பலர் தங்கள் தாய்மாரும் சகோதரிகளும் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டதைத்தம் கண்களாலேயே கண்டனர். பலருக்கு மூத்த சகோதரர்கள் இரவோடு இரவாகக் காணாமற் போனார்கள். அவர்களின் எலும்புக்கூடுகளே புதைகுழிகளிலிருந்து மீட்கப்பட்டன. அவற்றால் ஏற்பட்ட அச்சமும் பீதியும் அவர்களை விரக்தி நிலைக்குத் தள்ளியது.

இதுவே அவர்களுக்கு அநீதிக்கெதிராகப் போராடும் தைரியத்தைக் கொடுத்ததெனலாம். போராட வலுவற்ற சிறுவர்கள் தஞ்சம் புக வேறு இடங்களின்றி எங்கள் அமைப்புடன் இணைந்தார்கள். பொறுப்புள்ள ஒரு விடுதலை அமைப்பு என்ற வகையில் இது எங்களுக்குத் தரப்பட்ட ஒரு பாரிய பொறுப்பும் சவாலுமாக அமைந்தது. இவர்களைப் பாதுகாத்து, நல்ல குடிமக்களாக்கும் பொறுப்பு எங்களுடையதாய் இருந்தது. எதிர்கால சந்ததியின் சுதந்திரத்திற்காகப் போராட்டத்தை ஆரம்பித்த எமது அமைப்பு எங்களிடமுள்ள மட்டுப்படுத்தப்பட் வளங்களுடன் இந்தச் சிறார்களுக்குப் பாதுகாப்பும் கல்வியும் வழங்கும் பாரிய பணியை மேற்கொண்டது. இன்றும் தொடர்ந்து செய்துவருகின்றது. இந்த இடத்தில், முன்னைய அரசு இந்தக் கொடூரமான யுத்தத்தை மிகத் தீவிரமான முறையில் முன்னெடுத்ததைக் குறிப்பிடுவது பொருத்தமானது. ஆனால் மிகவும் கவலைக்குரியது. குழந்தைகளுக்கெதிரான இந்த நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு எந்த அமைப்பும் உரிய நேரத்தில் முன்வராதிருந்தமை விசனத்திற்குரியது.

கடந்தகால அரசு நடத்திய பொய்ப்பிரச்சாரங்களையும், புனைகதைகளையும் பொருட்படுத்தாது சில உள்ளூர் நிறுவனங்களின் உதவியுடன் எங்கள் அமைப்பு குழந்தைகளின் தேவைகளை ஓரளவிற்கேனும் நிறைவுசெய்ய முன்வந்தது; தொடர்ந்தும் செய்து கொண்டே இருக்கிறது. தமிழ்ச்சிறார்கள் பாராபட்சமாக நடத்தப்பட்டபொழுதும் அவர்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட பொழுதும் அவற்றைத் தடுப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இங்கே ஒரு யுத்தம் நடந்திருக்காது. இத்தகைய ஒரு பட்டறைக்கான தேவை கூட ஏற்பட்டிருக்காது.

சமாதான ஒளிக்கீற்று தென்படத்தொடங்கியுள்ள காலம் என்ற வகையில் இப்பொழுதேனும் நாம் குழந்தைகளின் துன்பங்களை நீக்கி அவர்கள் இழந்த குழந்தைப்பருவ வாழ்க்கையை மீளளித்து நல்ல குடிமக்களாக வளர்வதற்குரிய சூழலை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் கூடியுள்ளோம் என்பது மனநிறைவையும் ஆறுதலையும் தருகிறது. இந்த உன்னத பணியில் ஈடுபட முன்வந்திருக்கும் எல்லோரையும் குறிப்பாக யுனிசெவ் நிறுவனத்தினையும் மனமாரப்பாராட்டுகிறேன். உங்கள் முயற்சி வெற்றியடைய எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எனத் தெரிவித்தார்.

நேற்று வட்டக்கச்சியில் நடைபெற்ற சிறுவர்கள் நலன் தொடர்பான பயிற்சிப் பட்டறையின் முதல் நாள் நிகழ்வில் சிறிலங்கா அரசாங்கத்தின் சமாதான செயலகப் பணிப்பாளர் பேணாட்குணதிலக யுனிசெப் பிரதிநிதிகள் மற்றும் மனிதவள அபிவிருத்தி நிறுவனப் பிரதிநிதிகள் சமூகசேவை அமைப்புப் பிரதிநிதிகள், சுகாதார சேவையைச் சேர்ந்தவர்கள், சிறுவர் பாதுகாப்பு பிரதிநிதிகள் என பல்வேறு அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மேற்படி நிகழ்வில் ஆரம்ப உரைகளை அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன மற்றும் சமாதான செயலப் பணிப்பாளர் பேணாட் குணதிலக ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து அறிமுக வைபவம் இடம்பெற்றது. அதனையடுத்து பயிற்சிப் பட்டறை ஆரம்பமாகியது.(லோ)


## அறிவித்தல்

தமிழீழ மாணவர் அமைப்பால் குருபுரத்தில் நடாத்தப்படுகின்ற தமிழரசன் கணினிப் பயிற்சி நிலையத்தின் கணினி கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை 13.04.2003 அன்று தமிழரசன் கணினிப் பயிற்சி நிலையத்தில் பார்வையிடலாம்.

தமிழீழ மாணவர் அமைப்பு,
கிளிநொச்சி மாவட்டம்.

(3075)

## தமிழீழ மாணவர் அமைப்பின் பாடத்தெரிவு வழிகாட்டல் கருத்தமர்வு

க.பொ.த.சாதாரண தரத்தில் தோற்றி உயர்தரம் கற்கவிருக்கும் மாணவர்களுக்கான பாடத்தெரிவு, 'Z' புள்ளி உயர்வாகப் பெறுதல் என்பவற்றிற்கான வழிகாட்டல் கருத்தமர்வு

12.04.2003 சனி காலை 9.30 மணி - புதுக்குடியிருப்பு ம.வி.

பி.ப. 2.00 மணி - கிளிநொச்சி ம.வி.

2005 க.பொ.த.உயர்தரம் கற்கவுள்ள மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

(2276)

தமிழீழ மாணவர் அமைப்பு.


## சாவு அறிவித்தல்

**நடராசா சண்முகராசா (ஆசிரியர்)**

பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி.

அச்சுவேலி கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி. பரவிப்பாஞ்சானை வதிவிடமாகவும், பன்னக்கண்டி அ.த.க.பாடசாலை ஆசிரியரும் (கிளிநொச்சி மத்திய கல்லூரி, கனகபுரம் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் முதுநிலை ஆசிரியர்) திரு நடராசா சண்முகராசா அவர்கள் 10.04.2003 வியாழக்கிழமை நேற்று சாவடைந்தார்.

அன்னார் திருயோகசெல்வராணி (கல்வி அமைச்சு, திருகோணமலை) யின் கணவரும், அஜந்தன் அவர்களின் (பழைய மாணவன் கிளிநொச்சி மகா வித்தியாலயம்) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு.வ.க.நடராசா, செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், இந்திரகுமார் (இலங்கை வங்கி - அச்சுவேலி) சக்திவேல் (விசுவமடு), சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), உருத்திரகுமார் (பிரான்ஸ்), மகேந்திரன் (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சோமசுந்தரம்(பரவிப்பாஞ்சான்) நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், ரவிச்சந்திரனின் (பொதுச் சுகாதார பரிசோதகர் பரவிப்பாஞ்சான்) மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.04.2003 வெள்ளிக்கிழமை இன்று மாலை 3.00 மணிக்கு கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் நடைபெற்று கிளிநொச்சி பொதுமயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

**பரவிப்பாஞ்சான்,**
**கிளிநொச்சி.**
(3074)

தகவல்:
**சகோதரர், மனைவி, மகன், மைத்துனர்.**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.